**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**
**14.02.2020 ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின் நகர்மன்ற அவசர கூட்டத்தின் பொருட்கள்**
**தலைமை– திரு.கி.நாகராஜ்,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)**

1)

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை(ரூ இலட்சத்தில்) | தலைமை பொறியாளர் தொழில் நுட்ப அனுமதி எண்: |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு கூடுதல் அலுவலகம் கட்டிடம் கட்டுதல். | 150.00 | 262/2016-2017 |

மேற்கண்ட பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண். 25306–12/2016/பி2 நாள் 24.11.2016 ன்படி உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் திட்டத்தின் கீழ் கூடுதல் நகராட்சி அலுவலகம் கட்டிடம் கட்டுவதற்கு ரூ.150.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதற்கு 2016–2017 ம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விலை விபர பட்டியலின்படி இப்பணிக்கு தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் தொழில் நுட்ப அனுமதி எண் Roc No.1041/2016/DO1 நாள் 03.03.2017 ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தொழில் நுட்ப அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி நகர ஊரமைப்பு இயக்கம், கோவை அவர்களிடமிருந்து கட்டிட அனுமதி பெற அறிவுறுத்தியுள்ளதால் கட்டிட அனுமதியானது 14.02.2020 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வழங்கப்பட்ட தொழில்நுட்ப அனுமதியானது 2016–2017 ம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விலை விபர பட்டியல் படி வழங்கியுள்ளதால் இவ்விலையில் தற்சமயம் கூடுதல் அலுவலக கட்டிட பணியினை மேற்கொள்ள இயலாத நிலையில் வழங்கப்பட்ட தொழில் நுட்ப அனுமதியினை இரத்து செய்து பெறப்பட்ட DTCP கட்டிட அனுமதிக்கு 2019 – 2020 ம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விலை விபர பட்டியல்படியும் சரக்கு மற்றும் சேவை வரிக்குட்பட்டு புதியதாக மதிப்பீடு தயார் செய்து தலைமை பொறியாளர், சென்னை அவர்களிடமிருந்து தொழில்நுட்ப அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பெறப்பட்ட தொழில் நுட்ப அனுமதியினை இரத்து செய்து 2019 –2020 ம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விலை விபர பட்டியல்படியும், சரக்கு மற்றும் சேவை வரிக்குட்பட்டு புதியதாக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெற்று பணியினைமேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

2) 10.01.2020 அன்று ஒப்பந்த அடிப்படையில் நான்கு பிரிவு எழுத்தர் பணியாளர்களை சப்ளை செய்ய மாவட்ட ஆட்சியரின் குறைந்த ஊதிய நிர்ணய செயல்முறையின்படியும் நகராட்சி நிபந்தனைகளுக்குட்பட்டு பணியாளர்களை சப்ளை செய்ய கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்டுள்ளது பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | நாள் ஒன்றுக்கு ESI மற்றும் EPF ஒரு நபருக்கு |
|---|---|---|
| 1 | திருவாளர்.பிளேஸ்நெட் கம்ப்யூட்டர் சென்டர்,கே.ஆர்.பி.கம்பக்ஸ், கூடலூர் | ரூ.614/– |
| 2 | கம்ப்யூ சோன், உதகை மைசூர் சாலை, கூடலூர் | ரூ.625/– |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் வரிசை எண் 1 ல் கண்ட குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பிளேஸ்நெட் கம்ப்யூட்டர் என்பவருக்கு உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு –** ஒராண்டு காலத்திற்கு மாவட்ட ஆட்சியரின் குறைந்த ஊதிய

நிர்ணய செயல்முறை உத்திரவின்பேரில் செலவினம் மேற்கொள்ளவும் நகராட்சி அனைத்து சட்ட விதிகளுக்குட்பட்டு உத்திரவு வழங்கிட அனுமதிக்கலாம்.

**ஆணையாளர்(பொ)**
**கூடலூார் நகராாட்சி(நீலகிரி)**

## கூடலூர் நகராட்சி(நீலகிரி)

### 26.02.2020 ம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின் நகர்மன்ற சாதாரன கூட்டத்தின் பொருட்கள்

### தலைமை– திரு.கி.நாகராஜ், தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)

1) நீலகிரி மாவட்டம், கூடலூர் நகராட்சியில் உள்ள போக்குவரத்து துறைக்கு சொந்தமான கூடலூர் பேருந்து நிலையம் ரூ. 4.75 கோடி செலவில் விரிவாக்கம் மற்றும் மேம்படுத்துதல் பணி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த 31.12.2017 அன்று உதகையில் நடைப்பெற்ற புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவிக்கப்பட்டது. மேற்படி பேருந்து நிலையம் விரிவாக்கப்பணிகளை மேற்கொள்ள 11.11.2019 அன்று நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கலந்தாய்வு கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் இணைந்து பணிகளை மேற்கொள்ள ஒருங்கிணைப்பு கலந்தாய்வு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளை நகராட்சி நிர்வாகம் வாயிலாக மேற்கொள்ள போக்குவரத் துறையின் இசைவினையும், இத்திட்ட செயலாக்கத்திற்கு மூலதன மானிய நிதியிலிருந்து ரூ. 4.75 கோடி நிதி பெற்று கட்டிட பணிகள் மேற்கொள்ளவும் பணிகள் முடிவு பெற்றபின் மீண்டும் போக்குவரத்து துறைக்கு ஒப்படைக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு நிர்வாக அனுமதி 09.01.2020 அன்று அரசாணை எண்.4 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.09.01.2020 அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு கோவை தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக மேலாண் இயக்குநர் மற்றும் கூடலூர் நகராட்சி ஆணையாளர் அவர்களால் 24.02.2020அன்று இடம் ஒப்படைப்பு செய்ய ஒப்பந்தம் பத்திரம் கையொப்பம் இடப்பட்டுள்ளது. இந்நிலையில் மாவட்ட வனத்துறை, புவியியல் மற்றும் சுரங்கதுறை மற்றும் வேளாண்மை பொறியியல் துறை ஆகியவைகளுக்கு தடையின்மைச் சான்று கோரப்பட்டுள்ளது. எனவே நகர் ஊரமைப்பு இயக்குநர், கோவை அவர்களிடம் இருந்து கட்டிட அனுமதி பெற வேண்டி AAA குழுவின் இசைவு பெற மாவட்ட ஆட்சியருக்கு முன்பொழிவு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

2) இந்நகராட்சி உரத்திடங்கில் JCB வாகனம் இயக்குவதற்காக தீர்மான எண் .343 ன்படி ரூ.3.00 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டது. தற்போது JCB வாகனம் இயக்குவதற்கான பட்டியல் தொகை ரூ.305802/– ற்கு வரப்பெற்றுள்ளது. எனவே கூடுதல் செலவினம் ரூ.5802/–ற்கு அனுமதி வேண்டப்படுகறிது.
**அலுவலக குறிப்பு –1)** அனுமதி வழங்கலாம்
**2)** பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை ஏற்கலாம்.

3) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான EM திரவம் 100 லிட்டர் தமிழ்நாடு மல்ட்டி பர்பஸ் இன்கோ சர்வ் கூட்டுறவு நிறுவனத்திடம் கொள்முதல் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.100000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** மன்றம் அமனுமதி வழங்கலாம்

4) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான பிளீச்சிங் பவுடர் 1 டன் மற்றும் சுன்னாம்புத் தூள் 2 டன் ஆகியவற்றை தமிழ்நாடு மல்டி பர்பஸ் இன்கோ சர்வ் கூட்டுறவு நிறுவனத்திடம் கொள் முதல் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.60000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** மன்றம் அமனுமதி வழங்கலாம்

5) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனங்கள் TN 43 G0028 (Tractor) மற்றும் TN 43 6259 ஆகியவற்றிற்கு 01.04.2016 முதல் சாலை வரி மற்றும சேவை வரி செலுத்தப்படவில்லை. மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திலிருந்து ரூ.59916/– ற்கு கேட்பு வரப்பெற்றுள்ளது. எனவே சாலைவரி மற்றும் சேவை வரி தொகை ரூ.59916/– னை செலுத்த அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –1)** அனுமதி வழங்கலாம்
**2)** பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை ஏற்கலாம்.

6) இந்நகராட்சிக்கு என தட்டச்சர் பணியிடம் மற்றும் விபர குறிப்பாளர் பணியிடங்கள் ஏதும் இல்லை. தற்பொழுது கணியில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பதிவேற்றம் செய்ய, சொத்துவரி சீராய்வு மனுக்கள் மற்றும் நகராட்சி பணியாளர்களின் பணிவிபர அறிக்கை, தேர்தல் வார்டு மறுவரை, தேர்தல் பணி மேற்கொள்ள தேவையான பணியாளர்கள் இல்லை. எனவே மேற்காணும் பணிகளை உடனுக்குடன் செய்யவேண்டி உள்ளதால் நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் ந.க. எண்.8431/2019 நாள் 08.07.2019 எண்ணிட்ட அறிவிக்கைப்படி செயல்திறன்படைத்த தொழிலாளர் (Skill Labours)-1 சாதாராண பணியாளர் (Unskilled Labour) -1 ஆகிய இரு பணியாளர்களை கல்வி தகுதி உள்ள உள்ளூர் பணியாளர்களை 2019–2020 ஆண்டு மாவட்ட ஆட்சியர் விலைவிகிதத்தில் அறிவிக்கைப்படி 2019–2020 ஆம் ஆண்டு (01.03.2020 முதல் 28.02.2021) வரை பணியமர்த்தி பணியை செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ.5.50 இலட்சத்திற்கு பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கெள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – 2019–2020 ம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் அறிக்கையின்படி இரு பணியாளர்களை முற்றிலும் தற்காலிகமாக பணியமர்த்தி பணி செய்து கொள்ளவும் அதற்கான செலவினத்தை பொது நிதியில் இருந்து செலவிட்டுக்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

7) இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதியில் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், உரிமை கட்டணம் ஆகியவற்றை செலுத்துவதற்கு பொதுமக்களுக்கு வாகனம் மூலம் ஒளிபெருக்கியில் விளம்பரம் செய்தமைக்கு செய்தமைக்கு M/S. முகம்மது சுபைர் சவுன்ட்ஸ் & சர்வீஸ், கூடலூர் நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரரின் பணிகள் | M/S.S.K. Sounds, கூடலூர் | M/S. P.J.V. Sounds கூடலூர் | M/S. முகம்மது சுபைர் சவுன்ட்ஸ் & சர்வீஸ், கூடலூர் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதியில் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், உரிமை கட்டணம் ஆகியவற்றை செலுத்துவதற்கு பொதுமக்களுக்கு வாகனம் மூலம் ஒளிபெருக்கியில் விளம்பரம் செய்தமைக்கு செய்யுதல் | ரூ.72616/– | ரூ.71500/– | ரூ.69982/– |

**அலுவலக குறிப்பு–** 1) அனுமதி வழங்கலாம்

2) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய /S. முகம்மது சுபைர் சவுன்ட்ஸ் & சர்வீஸ், கூடலூர் அவர்களின் விலைப்புள்ளி தொகை ரூ.69982/– ஐ வழங்க மன்றத்தின்அனுமதி வழங்கலாம்.

8) முதியோர் உதவித் தொகை,விதவை உதவித்தொகை, முதிர்கன்னி, மாற்றுதிறனாளி மற்றும் DDWP உதவி தொகை பெறுவதற்கு வறுமைகோட்டிற்கு கீழ் சான்றிதழ் வழங்க கோரி வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து கடிதங்கள் வரப்பெற்றதின் அடிப்படையில் 2 நபர்களுக்கு மேற்படி பென்சன் பெறுவதற்காக மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) சுப்பையா – முதியோர்
த/பெ.அங்கநாதன்
க.எண்.7/196
கோழிப்பாலம், கூடலூர்

2) ராஜதுரை – முதியோர்
த/பெ.கந்தசாமி (Late)
க.எண்.6/343, அக்ரஹாரம்,கூடலூர்

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

9) இந்நகராட்சிக்கு சொந்தமான துப்புரவு பணியாளர் குடியிருப்பில் உள்ள கழிப்பிடம், கோத்தரவயல் பணியர்பாடி சமுதாய கழிப்பிடம், நகராட்சி அலுவலக கழிப்பிடம் ஆகியவற்றில் நச்சுகுழியினை சுத்தம் செய்யும் பணியினை மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.1 இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்

10) இந்நகராட்சி சமுதாய மற்றும் பொதுக் கழிப்பிட நச்சுத் தொட்டிகளை சுத்தம் செய்வதற்காக விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தனி அலுவலரின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **விபரம்** | **திரு. எம். ராஜ், ஜானகி செப்டிக் டேங்க் கிளீனிங், தராசுரம்** | **M/s. அறிவழகன் செப்டிக் டேங்க் கிளீனிங்ஸ் சுவாமிமை** | **M/s. விஜய் செப்டிக் டேங்க் கிளீனிங்ஸ், சுவாமிமலை** |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி சமுதாய மற்றும் பொதுக் கழிப்பிட நச்சுத் தொட்டிகளை சுத்தம் செய்தல் | ரூ.24000/– | ரூ.28000/– | ரூ.26000/– |

**அலுவலக குறிப்பு –** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **திரு. எம். ராஜ், ஜானகி செப்டிக் டேங்க் கிளீனிங், தராசுரம்** நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

3) பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை ஏற்கலாம்.

11) இந்நகராட்சிக்குட்பட்ட தொரப்பள்ளி பகுதியில் கொட்டப்பட்ட திடக்கழிவுகளை டிப்பர் வாகனம் மூலம் அகற்றுவற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **விபரம்** | திரு. உசைன் ஒப்பந்ததாரர் கூடலூார் | திரு. வி.பி. ஜீவகன் ஒப்பந்ததாரர் கூடலூார் |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்குகுட்பட்ட தொரப்பள்ளி பகுதியில் கொட்டப்பட்ட திடக்கழிவுகளை டிப்பர் வாகனம் மூலம் அகற்றுதல் | 3 MT கொள்ளளவு – 6000<br>9 MT கொள்ளளவு – 10500<br>12 MT கொள்ளளவு – 13500 | 3 MT கொள்ளளவு – 6200<br>9 MT கொள்ளளவு – 10600<br>12 MT கொள்ளளவு – 13600 |

**அலுவலக குறிப்பு –** 1) அனுமதிக்கலாம்.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. உசைன், ஒப்பந்ததாரர், கூடலூார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

3) பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

12) இந்நகராட்சிக்குட்பட்ட தொரப்பள்ளி பகுதியில் கொட்டப்பட்ட திடக்கழிவுகளை அகற்றுவதற்காக JCB வாகனம் இயக்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | திரு. செய்து அமர்கான் கூடலூர் | திருவாளர்கள். எஸ். எஸ் அன்ட் கோ. கூடலூர் |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட தொரப்பள்ளி பகுதியில் கொட்டப்பட்ட திடக்கழிவுகளை அகற்றுவதற்காக JCB வாகனம் இயக்குதல் | ரூ.1950/– (ஒரு மணி நேரத்திற்கு) | ரூ.1890/– (ஒரு மணி நேரத்திற்கு) |

**அலுவலக குறிப்பு** – 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரப்பெற்ற ஒப்பபநதப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருவாளர்கள். எஸ். எஸ் அன்ட் கோ. கூடலூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

3) பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

13) இந்நகராட்சிக்கட்பட்ட வார்டு எண் 3 நடு கூடலூர் பிள்ளையார் கோவில் தெரு க.எண்.6/16 A1K வீட்டருகில் நடைபாதை அமைக்க பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம்.

14) இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவில் உள்ள ஈப்பு வாகனம் TN 43 Z 4203 வாகனத்திற்கு ஆயில் சொ்விஸ், ஸ்டியரிங் ராட்,பேரிங் பால் ஜாயின்ட் பிரேக்பேட், லிங்க் ராட் மற்றும் செல்ப் மோட்டார் டைனாமோ பழுதுகளை சரி செய்ய குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர் R.K.மோட்டார்ஸ், கூடலூர் நிறுவனத்தில் பணி செய்யவும் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரரின் பணிகள் | R.K.மோட்டார்ஸ், கூடலூர் | M/S. பென்ஸ் மோட்டார், கூடலூர் | M/S. பயனீர் ஆட்டோ கேரேஜ் கூடலூர் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவில் உள்ள ஈப்பு வாகனம் TN 43 Z 4203 வாகனத்திற்கு ஆயில் சொ்விஸ், ஸ்டியரிங் ராட்,பேரிங் பால் ஜாயின்ட் பிரேக்பேட், லிங்க் ராட் மற்றும் செல்ப் மோட்டார் டைனாமோ பழுதுகளை சரி செய்யுதல் | ரூ.9960/– | ரூ.10960/– | ரூ.10530/– |

**அலுவலக குறிப்பு**– 1) அனுமதி வழங்கலாம்

2)வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திருவாளர் R.K.மோட்டார்ஸ், கூடலூர் அவர்களின் விலைப்புள்ளி தொகை ரூ.9960/– ஐ வழங்க மன்றத்தின்அனுமதி வழங்கலாம்.

15) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 ல் கரிம் நகர் பகுதியில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைக்கும் பணிக்கு செலவினம் ரூ.8.90 இலட்சம் நகர் மன்ற கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள 04.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 ல் கரிம் நகர் பகுதியில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைக்கும் பணிகள் | 8.90 | திரு.ராஜேஷ் | மதிப்பீட்டை விட 0.01 % குறைவு |
| | | | திரு. உசைன் | மதிப்பீட்டை விட 0.36 % அதிகம் |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலின்படி 0.01 % குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த **திரு.ராஜேஷ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 0.01 % குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.ராஜேஷ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

16) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 சளிவயல் சாலை வனதுர்க்கா லைன் முதல் சாரா எஸ்டேட் எல்லை அருகில் நடைபாதையுடன் கூடிய தடுப்புச்சுவர் பணிக்கு செலவினம் ரூ.9.90 இலட்சம் நகர் மன்ற கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள 04.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 சளிவயல் சாலை வனதுர்க்கா லைன் முதல் சாரா எஸ்டேட் எல்லை அருகில் நடைபாதையுடன் கூடிய தடுப்புச்சுவர்அமைக்கும் பணிகள் | 9.90 | திரு. உசைன் | மதிப்பீட்டை விட 0.01 % குறைவு |
| | | | திரு.ராஜேஷ் | மதிப்பீட்டை விட 0.07 % அதிகம் |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலின்படி 0.01 % குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த **திரு. உசைன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 0.01 % குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த **திரு. உசைன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

17) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 கோடமூலா Reach III சிமெண்ட் கான்கிரிட் சாலை பணிக்கு செலவினம் ரூ.10.00 இலட்சம் நகர் மன்ற கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள 04.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 கோடமூலா Reach III சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைக்கும் பணிகள் | 10.00 | திரு. ஷாஜி | மதிப்பீட்டை விட 0.01 % குறைவு |
| | | | திரு.உசைன் | மதிப்பீட்டை விட 0.34 % அதிகம் |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலின்படி 0.01 % குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த **திரு. ஷாஜி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 0.01 % குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த **திரு. ஷாஜி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

18) இந்நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகத்தில் உள்ள கடைகளின் மூலம் வசூலிக்கப்பட் சேவை வரிகள் மற்றும் GST க்கான Returning Filing கடந்த செப்டம்பர் 2017 முதல் டிசம்பர் 2019 வரை உள்ள 28 மாதங்களுக்கு மாதம் ரூ.500/– வீதம் 28 மாதங்களுக்கு ரூ.14000/– தொகையினை M/S Adham Associate Auditing Office திரு.எஸ்.சைத் இப்ராஹிம் என்பவருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம்.

19) இந்நகராட்சியில் 2020–2021 ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் மற்றும் 2019–2020 ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத் திட்டம் தயார் செய்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்ற அனுமதி வழங்கலாம்.

20) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 18 ஈப்பன்காடு மாக்கமூலா பகுதியில் புல எண் 732/2 0.20 ஏக்கரில் உரக்கிடங்கு அமைக்க வருவாய் வட்டாட்சியரிடமிருந்து நிலத்தினை பெற மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடமிருந்து அனுமதி பெறப்பட்ட நிலத்திற்கு ரூ.97150/– அரசு கணக்கில் செலுத்தி நிலத்தினை பெற மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்ற அனுமதி வழங்கலாம்.

21) கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தென் மேற்கு பருவ மழையில் 2019–2020 ல் கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பெரும்பாலான பகுதிகளில் வெள்ள பெருக்க ஏற்பட்டு நில சரிவும் ஏற்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியான கோத்தரவல் பகுதியில் பழைய அக்காடு செல்லும் சாலையின் ஓரம் மண் சரிவு ஏற்பட்டுள்ளதால் இச்சாலையில் போக்குவரத்து இயக்க முடியாமல் உள்ளது. ஊர் பொதுமக்கள் சாலையின் ஓரம் தடுப்புச்சுவர் Reach I அமைப்பதற்கு கேட்டுக் கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு பொது நிதியின் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்ற அனுமதி வழங்கலாம்.

22) கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தென் மேற்கு பருவ மழையில் 2019–2020 ல் கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பெரும்பாலான பகுதிகளில் வெள்ள பெருக்க ஏற்பட்டு நில சரிவும் ஏற்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியான கோத்தரவல் பகுதியில் பழைய அக்காடு செல்லும் சாலையின் ஓரம் மண் சரிவு ஏற்பட்டுள்ளதால் இச்சாலையில் போக்குவரத்து இயக்க முடியாமல் உள்ளது. ஊர் பொதுமக்கள் சாலையின் ஓரம் தடுப்புச்சுவர் Reach II அமைப்பதற்கு கேட்டுக் கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு பொது நிதியின் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்ற அனுமதி வழங்கலாம்.

23) கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தென் மேற்கு பருவ மழையில் 2019–2020 ல் கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பெரும்பாலான பகுதிகளில் வெள்ள பெருக்க ஏற்பட்டு நில சரிவும் ஏற்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியான கோத்தரவல் பகுதியில் பழைய அக்காடு செல்லும் சாலையின் ஓரம் மண் சரிவு ஏற்பட்டுள்ளதால் இச்சாலையில் போக்குவரத்து இயக்க முடியாமல் உள்ளது. ஊர் பொதுமக்கள் சாலையின் ஓரம் தடுப்புச்சுவர் Reach III அமைப்பதற்கு கேட்டுக் கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு பொது நிதியின் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்ற அனுமதி வழங்கலாம்.

24) கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தென் மேற்கு பருவ மழையில் 2019–2020 ல் கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பெரும்பாலான பகுதிகளில் வெள்ள பெருக்க ஏற்பட்டு நில சரிவும் ஏற்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியான கோத்தரவல் பகுதியில் பழைய அக்காடு செல்லும் சாலையின் ஓரம் மண் சரிவு ஏற்பட்டுள்ளதால் இச்சாலையில் போக்குவரத்து இயக்க முடியாமல் உள்ளது. ஊர் பொதுமக்கள் சாலையின் ஓரம் தடுப்புச்சுவர் Reach IV அமைப்பதற்கு கேட்டுக் கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு பொது நிதியின் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்ற அனுமதி வழங்கலாம்.

25) இந்நகராட்சிக்கு சொந்தமான ஆய்வு மாளிகைக்கு தேவையான பொருட்கள் வாங்கியதற்க்கும் அங்கு உபயோகப்படுத்தப்படும் போர்வைகள், மெத்தை விரிப்புகள் ஜன்னல் விரிப்புகள் ஆகியவைகள் சலவை செய்ததற்கான தொகை ரூ.16800/– ஐ திரு.ரா.சந்திரசேகர் ஆய்வு மாளிகை காப்பாளருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்ற அனுமதி வழங்கலாம்.

26) இந்நகராட்சிக்கு சொந்தமான 27 வது மைல் தற்காலிக உரக்கிடங்கிற்கு தினசரி வரும் குப்பைகளை எடை போட்டு சேகரிக்க எடை இயந்திரம் இல்லாத காரணத்தால் இப்பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகள்

| வ.எண் | வேலையின் பெயர்/விநியோகம் செய்த பொருட்கள் | திருவாளர் எஸ்.கே.ஜெகஜோதி | திருவாளர்.விநாயகா ஸ்டீல்ஸ், கூடலூர் | திருவாளர்.ஜனதா மெடிக்கல் ஆன்ட் ஸ்கேல்ஸ் | குறைந்த ஒப்பந்தபுள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான 27 வது மைல் தற்காலிக உரக்கிடங்கிற்கு தினசரி வரும் குப்பைகளை எடை போட்டு சேகரிக்க எடை இயந்திரம் விநியோகம் செய்தல் | ரூ.32000/– | ரூ.33000/– | ரூ.26100/– | திருவாளர்.ஜனதா மெடிக்கல் ஆன்ட் ஸ்கேல்ஸ், கூடலூர் ரூ.26100/– |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்.ஜனதா மெடிக்கல் ஆன்ட் ஸ்கேல்ஸ், கூடலூர் அவர்கள் ரூ.26100/– அளித்துள்ளார். இவரது தொகையினை ஏற்று பணி உத்திரவு வழங்க மற்றும் தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்ற அனுமதி வழங்கலாம்.

27) மாவட்ட ஆட்சியர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.டி8/647/2020 நாள் 18.02.2020 ன்படி இம்மாவட்டத்தில் பணிபுரியும் அனைத்து துப்புரவு பணியாளர்களையும் 25.02.2020 அன்று உதகை ரெக்ஸ் பள்ளியில் வைத்து கௌரவிக்கும் விதமாக பாராட்டு விழா நடத்தப்படுவதாகவும், அதற்கு இந்நகராட்சி துப்புரவு பணியாளர்களை அழைத்து வரவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களை அழைத்து செல்வதற்கான பேருந்து கட்டணம் மற்றும் காலை சிற்றுண்டி செலவு ரூ.20000/– க்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – 1) அனுமதி வழங்கலாம்.

3) பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை ஏற்கலாம்.

28) இந்நகராட்சியில் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு கடந்த 02.06.2017 முதல் 28.02.2018 வரை சமையல் எரிவாயு விநியோகம் செய்ததற்கான பட்டியல் தொகை ரூ.330454/– ஐ வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்ற அனுமதி வழங்கலாம்.

29) இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு தேவையான 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட Bulk Digester வாங்குவதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் கோரரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | M/s. ஏ.கே. ஏஜென்சீஸ், கோவை | M/s. கிரீன் அன்ட் கிளீன் அசோசியேட்ஸ், குன்னூர் |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு தேவையான 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட Bulk Digester விநியோகம் செய்தல் | ரூ.890400/– | ரூ.907200/– |

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **M/s. ஏ.கே. ஏஜென்சீஸ், கோவை** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

3) பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை ஏற்கலாம்.

30) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகிய திடக்கழிவுகள் கடந்த 2007 முதல் 2015 ம் ஆண்டு வரை தொரப்பள்ளி பகுதியில் கொட்டப்பட்டு வந்தது. தேசிய பசுமை தீர்ப்பாய தீர்ப்பின்படி மேற்கண்ட இடத்தில் கொட்டப்பட்ட கழிவுகளை அகற்றும் பணி தனி அலுவலர் அனுமதியின்படி மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதுவரை 500 MT திடக்கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள சுமார் 600 MT திடக்கழிவுகளை அகற்றவேண்டியது அவசியமாகிறது. எனவே அகற்றவேண்டியது அவசியமாகிறது. எனவே திடக்கழிவுகளை டிப்பர் லாரிகள் மூலம் அகற்றும் பணியினை மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) அனுமதி வழங்கலாம்.

3) பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணியினை மேற்கொண்டதை ஏற்கலாம்.

31) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகிய திடக்கழிவுகள் கடந்த 2007 முதல் 2015 ம் ஆண்டு வரை தொரப்பள்ளி பகுதியில் கொட்டப்பட்டு வந்தது. தேசிய பசுமை தீர்ப்பாய தீர்ப்பின்படி மேற்கண்ட இடத்தில் கொட்டப்பட்ட கழிவுகளை அகற்றும் பணி தனி அலுவலர் அனுமதியின்படி மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதுவரை 500 MT திடக்கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள சுமார் 600 MT திடக்கழிவுகளை அகற்றவேண்டியது அவசியமாகிறது. டிப்பர் லாரிகளில் JCB இயந்திரம் மூலம் திடக்கழிவுகளை நிரப்பும் பணியினை மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) அனுமதி வழங்கலாம்.

3) பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணியினை மேற்கொண்டதை ஏற்கலாம்.

32) இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்க்கு தேவையான நுண்உயிர் கலவை விநியோகம் செய்வதற்காக விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | M/s. ஏ.கே. ஏஜென்சிஸ், கோவை | M/s. கிரீன் அன்ட் கிளீன் அசோசியேட்ஸ், குன்னூர் |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்க்கு தேவையான நுண்உயிர் கலவை விநியோகம் செய்தல் | ரூ.546/– | ரூ.567/– |

**அலுவலக குறிப்பு** – 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **M/s. ஏ.கே. ஏஜென்சிஸ், கோவை** நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

3) பொதுசுகாதார அவசிய அவசரம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதிபெற்று விநியோக உத்திரவு வழங்கியதை ஏற்கலாம்.

33) கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தென் மேற்கு பருவ மழையால் 2019–2020 ல் கூடலூர் நகராட்சியில் பெரும்பாலான பகுதிகளில் நில சரிவு ஏற்பட்டுள்ளது. சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியான நாயக்கன்மூலா பகுதிக்கு செல்லும் சாலையின் ஓரம் மன் சரிவு ஏற்பட்டுள்ளதால் சாலைக்கும் சாலையில் செல்லும் ஊர் பொது மக்களுக்கு ஆபத்தாக உள்ளதால் ஊர் பொது மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க சாலையின் ஓரம் தடுப்புச்சுவர் அமைப்பதற்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.90/– இலட்சத்திற்கு பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

34) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 ஒ.வி.எச் மெயின் சாலை முதல் க.எண்.4/139 வரை உள்ள கழிவு நீர்கால்வாய்க்கு மூடி அமைத்து அங்கு உள்ள சுமார் 5 வீடுகளுக்கு நடைபாதையாக பயன்படுத்த பொதுமக்கள் கேட்டு கொண்டதற்கு இணங்க திருமதி.வைலட் மேரி என்பவர் மனு செய்துள்ளார். இப்பணியினை மேற்கொள்ள பொதுநிதியின் கீழ் தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.75 இலட்சத்திற்கு மன்ற பொரும் வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம்.

35) இந்நகராட்சியின் அலுவகத்தில் வரி வசூல் செலுத்தும் மையம் வெளிப்புற பகுதியில் பொதுமக்கள் வரி செலுத்த நிழற்குடை அமைக்க நகராட்சி வாகனம் நிறுத்தம் பகுதிக்கு நிழற்குடை அமைக்க மற்றும் இந்நகராட்சியின் பெயர் பலகை அமைக்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம்.

36) இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் கோடைகாலம் நிலவுவதால் குடிநீர் பற்றாக்குறை நிலவுவதற்கு முன்னெச்செரிக்கையாக பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் வழங்க 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டேங்கர் லாரியை வாடகைக்கு விநியோகம் பெற தோரயாமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.20/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம்.

37) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15,14,19 மங்குழி டி.பி.சாலை மற்றும் அத்திபாளி பள்ளி வாசல் சாலை பகுதியில் உள்ள மக்களுக்கு குடிநீர் குழாய் அமைக்க பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தோராயமாக மதிப்பீடு ரூ.2.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம்.

38) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5 பகுதியில் சிமெண்ட் கான்கீரிட் சாலை சீரமைக்க பொதுமக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம்.

39) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்7 கோழிப்பாலம் பகுதியில் உள்ள சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் 2018–2019 ம் ஆண்டில் தரைமட்ட நீர்தேக்க தொட்டி அமைக்க அனுமதி வழங்கப்பட்டதற்கு பணிகள் தற்சமயம் முடிக்கப்பட்டுள்ளது. குடிநீர் தொட்டி பாதுகாப்பாக இருப்பதற்கு தொட்டியை சுற்றி கம்பி வேலி அமைப்பதற்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.6.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம்.

**ஆணையாளர்**
**கூடலூார் நகராட்சி(நீலகிரி)**